# ஔவையார் புறப்பாடல்கள் திணை, துறை அமைப்பு

*சி. அர்ச்சனா*
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி
உசிலம்பட்டி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5035

**கட்டுரை சுருக்கம்**

*ஔவையார் பாடிய புறப்பாடல்களில் அதியமான் பற்றி பாடல்கள் அதிகமாகும். புறம் எனும் போது போர், வீரம், கொடைத்திறத்தினைப் பாடுபொருளாக கொண்டு பாடப்படுவதாகும். ஔவையாரின் புலமைத்திறன் வெளிப்படும் வகையில் பாடல்கள் அமைகின்றன. பல்வேறு துறைகளில் பாடிய பாடல்கள் அனைத்தும் போர் மரபினைக் குறிப்பிடும் நிலையில் அதியன் வீரமே தலைசிறந்த பண்பாகவும் அவனது சிறப்பாகவும் குறிப்பிடும் ஔவையாரின் நுட்பமான பாடல் புனையும் திறன் வெளிப்படுவது புலனாகின்றது.*

## முன்னுரை

பதினெண் மேற்கணக்கு நூல்கள் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு என்பவையாகும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு புறப்பொருள் பற்றி நானூறு பாடல்களைக் கொண்டது. புறநானூற்றில் ஔவைப்பாடிய புறப்பாடல்கள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலிய திணைகளிலும், துறை வாழ்த்தியல், இயன்மொழி, தானைமறம், அரச வாகை, பரிசில்விடை, மூதின் முல்லை, வல்லாண்முல்லை, போன்ற துறைகளிலும் பாடியுள்ளார். ஔவையார் பாடிய புறப்பாடல்கள் மொத்தம் 33 ஆகும். இவற்றில் அதியன் பற்றி 22 பாடலும், பொகுட்டெழினி பற்றி 3 பாடலும் மூவேந்தர் பற்றி 1 பாடலும், நாஞ்சில் வள்ளுவன் பற்றி 1 பாடலும், பொதுவான பாடல்கள் 6 பாடலும் என 33 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

ஔவையார் அதியமானைப் பற்றிய பாடல்களின் எண்ணிக்கை அதிகம். இப்புறப்பாடல்களில் இவரது புலமைத்திறனோடு அன்பு, நன்றியுணர்வு, போர்நெறி, போன்ற பண்புகள் புலப்படுகின்றன. ஒவ்வொரு பாடலிலும் உள்ள திணை, துறை அமைப்புகளைப் பொருத்திக் காட்டுவதுடன் அவற்றின் விளக்கத்தினை அறிவது கட்டுரையின் மையமாக அமைகின்றது.

**ஔவைப் பாடிய பாடல்களின் திணை விளக்கம்**

புறத்திணை ஏழு எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தும்பை என்பது புறத் திணைகளில் ஒன்று, தும்பைப் பூவைச் சூடிப் பகைவரோடு போர் செய்வதற்குச் செல்லுவர். பாடாண் திணையென்பது ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள், ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடுவதாகும். பகைவர் கைப்பற்றிய பசுக்கூட்டங்களை மீட்பது கரந்தைத் திணையாகும். பகையரசனோடு போர் செய்யக் கருதிய மன்னன் பகைவர் நாட்டில் வாழும் பசுக்கூட்டங்களைக் கவர்வது வெட்சித் திணையாகும். இவ்வாறு ஔவையார் புறப்பாடல்களில் பல திணைகளில் பாடல்களைப் பாடியுள்ளார்.

**ஔவைப் பாடிய பாடல்களின் துறை விளக்கம்**

தானை மறம் என்பது இருபக்கப் படைகளும் தங்களுள் போரிட்டு மடியாதவாறு ஒருவீரன் பாதுகாத்த திறத்தைக் கூறுவது ஆகும். வாழ்த்தியல் துறை என்பது தலைவனை வாழ்த்திக் கூறுவதாகும். இயன்மொழி துறை என்பது ஒருவர் இயல்பைக் கூறுதலும், அவர் முன்னோர் செய்தியை அவர் மேல் ஏற்றிக் கூறுதலுமாகிய இயல்பைக் கூறுவது ஆகும்.

**ஔவையார் - அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடியபாடல்**

தும்பை திணை, துறை: தானை மறம் என்ற திணை துறை அமைப்பில் உள்ளது. பகைவரோடு போர்செய்வதற்குச் தும்பைப் பூவைச்சூடி செல்வதை இப்பாடலில் ஔவை பாடியுள்ளார். தானை மறம் துறை இருபக்கப் படைகளும் தங்களுள் போரிட்டு மடியாதவாறு ஒருவீரன் பாது காத்த திறத்தைக் கூறுவதாக இத்துறை அமையப்பெற்றுள்ளது.

**களம்புகல் ஓம்புமின், தெய்விர்! போர் எதிர்த்து**
**எம்முளும் உளன்ஒரு பொருநன்: வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த கால்அன் னோனே[1]**

பகைவரே! போர்களம் செல்வதைத் தவிருங்கள், போரில் எதிரிடும் ஆற்றலுடைய ஒரு வீரன் இருக்கின்றான். அவன் மாதம் ஒன்றில் எண் தேர்கள் செய்ய வல்ல தச்சன் ஒருவன் ஒரு மாதம் முயன்று வலிமையா கச் செய்த ஒரு தேர்க்காலை ஒப்பவன் என ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சி யைப் பாடிய பாடலாகும் என ஆராயலாம். மேலும் ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடிய பாடல்,

**யாவிர் ஆயினும் "கூழை தார்கொண்டு**
**யாம்பொருதும்"என்றல் ஓம்புமின் - ஓங்குதிறல்**
**ஒளிறுஇலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்,**
**கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்[2]**

பகைவரிடம் நீங்கள் யாராக இருந்தாலும், முன்படைக் கொண்டோ அல்லது பின் படைக்கொண்டோ நாம் போர் செய்வோம் என்று கூறுவதை விட்டு விடுங்கள், என்றும் எங்கள் தலைவன் வலிமை வாய்ந்தவன், நீண்ட வேலையும் உடையவன், அணிகலன்களை அணிந்த விரிந்த மார்புடையவன் தலைவன். ஔவையார் இவ்வாறு அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடியுள்ளார்.

அதியமானின் உடல் வலிமை, அணிகலன் சிறப்பும் பகைவரிடம் அரசரின் சிறப்புகளைக் கூறி போர்செய்யும் நினைவையே விட்டு விடும் படி ஔவை இப்பாடலில் வாகைத் திணையும், தானை மறம் துறையும் வைத்துப் பாடியுள்ளார்.

**உடையவளை கடுப்ப மலர்ந்த காந்தள்**
**அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்**
**மறப்புலி உடலின், மான்கணம் உளவோ?**
**மருளின விசும்பின் மாதிரத்து ஈண்டிய[3]**

ஔவை இப்புறப்பாடலில் அதியமான் வீரத்தை கூறியதோடு தும்பைத் திணையிலும் தானை மறத் துறையிலம் பாடியது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

அதியமான் கணைய மரம் போன்றும், முழந்தாள் வரை நீண்ட கையையும், மன உறுதியையும் உடையவனே என்றும் ஔவை புகழ்கிறார். உடைந்த வளையலைப் போல் மலர்ந்த காந்தளும், காட்டுமல்லிகையும், மலைச்சரிவில் புலி தாக்கினால் மான் கூட்டம் இருக்குமா? என்றும் மணல் அகலவும் கல்பிளக்கவும் நடக்கும் பெருமிதக் காளைக்குப் போக முடியாத வழி உண்டா? நீ போர்க்களம் புகுந்தால் உன் நிலத்தின் மண்ணைக் கொண்டு ஆரவாரிக்கும் வீரரும் உள்ளார்களோ என்று அதியனின் சிறப்பை ஔவை இப்புறப்பாடலில் புகழ்ந்து பாடுகிறார்.

திணை : பாடாண், துறை : வாழ்த்தியல் ஔவையார் பாடிய புறநானூற்றில் உள்ள புறப்பாடல்களில் ஒன்று ஔவை அதியமான் அஞ்சியைப் பாடியது. இப்பாடல் பாடாண் திணையிலும், வாழ்த்தியல் துறையிலும் அமைந்துள்ளது. அவை

***பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி***
***நீல மணிமிடற்று ஒருவன் போல***
***மன்னுக – பெரும! நீயே, தொலைநிலைப்***
***பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட***
***சிறியலை நெல்லித் தீம்கனி குறியாது[4]***

என்ற இப்புறப்பாடலானது அதியமானின் புகழ், வலிமை, கொடை, அருள், ஆகியவற்றைச் சிறப்பித்து பாடுவதாக பாடாண் திணையில் பாடப்படுள்ளது. பாட்டுடைத் தலைவனான அரசர் அதியமானை வாழ்த்தி இப்புறப்பாடல் அமைவதால் வாழ்த்தில் துறையில் இப்பாடல் பொருத்தி வருகிறது என கண்டு கொள்ளலாம்.

வலிமையான வாளால் பகைவர் போர்க்களத்தில் ஒழிய, வெற்றி கொண்ட வீரக்கழலையும், வீர வளையையும், பெரிய கையையும், கிளர்ச்சி உண்டாக்கும் மதுவையும், உடைய அதியமானே! பகை அரசர்களோடு போரிட்டுப் பெறும் செல்வத்தையும், பொன் மாலையையும் உடைய அஞ்சியே! பால்போன்ற பிறையை முடியில் சூடியவனும், நீலமணிபோலும் கழுத்தை உடையவனும் ஆகிய இறைவனைப்போல் நீ நிலையாக இருப்பாய். உயரமான மலைப் பிளவில் உள்ள மரத்திலிருந்து பெற்று வந்த நெல்லிக்கனியை எனக்கு கொடுத்து சாவுதலைப் போக்கிய நீ என்றும் வாழ்க என்று இப்புறப்பாடல் வழி ஔவை அதியனைப் பாடுகிறார். இப்புறப்பாடலில் ஔவை அதியமான் புகழ் வலிமை, கொடை, அருள், ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் எனலாம். இயன்மொழித் துறையில் அமைந்த இப்பாடலில் அதியமானின் இயல்பையும், அவர் முன்னோர் செய்தியை அவர் மேல் ஏற்றிக் கூறியும் அதியமானின் பண்புகளைப் பாராட்டுகின்றார்.

***யாழொடும் கொள்ளா பொழுதொடும் புணரா***
***பொருள் அறி வாரா ஆயினும், தந்தையர்க்கு***
***அருள்வந் தனவால், புதல்வர்தம் மழலை,***
***என்வாய்ச் சொல்லும் அன்ன – ஒன்னார்***
***கடிமதில் அரண்பல கடந்த***
***நெடுமான் அஞ்சி! அருளன் மாறே[5]***

என்று யாழிசையோடும் பொருந்தாது, காலத்தோடும் பொருந்தாது, பொருள் அறியவும் முடியாது. இருப்பினும், பெற்றவர்க்குக் குழந்தையின் மழலைச் சொல் இன்பம் தரும். அதுபோல என் சொற்களும் பேரின்பம் தரும். பகைவர்களின் அரண்களை வென்ற அதியமான்! நீ அருள் செய்தலால் என் செ ால்லும் அத்தகையதானது என்று ஔவை அதியமானின் புகழ், கொடை, அருள், போன்றவற்றை இப்பாடலில் புகழ்ந்து பாடியுள்ளார்.

**வாகைத் திணையும், அரச வாகைத் துறை**

அதியமான் வகைப் பூவைச் சூடிப் பகை அரசசை வெல்லுதலை, பின்வரும் புறப்பாடலில் ஔவையார் எடுத்துரைக்கிறார்.

**நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ**
**காதல் மறந்து, அவர் தீது மருந்து அறுமார்**
**அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்**
**திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி**
**மறம்கந் தாக நல்அமர் வீழ்ந்த6**

என்று வலிமையாகக் கட்டப்பெற்ற முரசம், இழும் என்னும் ஒலியோடு முழங்கப் பகைவர் மேல் சென்று, போர் வெல்லல் எவ்வாறு முடியும் பகைத்து வந்தவர் உன் கொடிப்படையை எதிர்க்கவும் இயலாதுஈ சிதறி ஓடுதல் உடைய பெருமையில்லாத வேந்தர், நோயினால் இறந்த உடலைத் தழுவி ஆசையை மறந்து, வாளால் இறந்து படாதஈ அவர் குற்றம் நீங்குமாறு அறநெறியை விரும்பிய நான்மறையாளர் பசும்புல் பரப்பிக் கிடத்தி, வீரமே அறநெறியை விரும்பிய நான்மறையாளர் பசும்புல் பரப்பிக் கிடத்தி, வீரமே பற்றுக் கோடாகப் போர்க்களத்தில் இறந்த, நெடிய வீரக்கழல் அணிந்த வீரர் செல்லும் அமரர் நிலை அடைக என்று வாளால் வெட்டி அடக்கம் செய்யும் இழிமை எய்தினர். மதம் பொருந்திய பெரிய யானை போர்க்களத் தில் மடிய அப்போர்க்களம் சிதற நீ வெட்டி விழுப்புண் பட்டமையால் இனி முரசுகள் முழங்கி வெல்லுதல் இயலாது.

இவ்வாறு இப்புறப்பாடலில் அரச வாகைத் துறை மூலம் அரசனது வெற்றியைக் கூறுகிறார் ஔவையார்.

**ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்**
**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல[7]**

என்று அதியமானை ஔவையார் புகழ்கிறார். ஓர் ஊரில் உள்ள யானையை குளிப்பாட்டுவதற்கும், வெண்ணிறத் தந்தத்தைக் கழுவுவதற்கும், நீர்நிலையில் படியும் யானை போல நீ எனக்கு இனிமையானவன், ஆனால் அந்த யானை மதம் கொண்ட நிலையைப் போல அதியமான் பகைவர்க்கு மிகவும் கொடுமையானைவன், என்று வாகைத் திணையையும், அரச வாகை துறையையும் இணைத்து வைத்து ஔவைப் பாடியுள்ளார்.

**பாடாண் திணையும், வாள் மங்கலத் துறையும்**

ஔவையார் தம் புறப்பாடலில் அதியனின் கொடைச் சிறப்பு பற்றியும், வலிமைப் பற்றியும் ஔவை இப்பாடலில் கூறுவதால் இப்பாடல் பாடாண் திணையாக இக்காலத்திற்கு மிகவும் பொருந்தி வருகிறது.

**கொல்துறைக் குற்றில மாதோ – என்றும்**
**உண்டாயின் பதம்கொடுத்து**
**இல்லாயின் உடன்உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல்என் கோமான், வைந்நுதி வேலே[8]**

என்ற இப்பாடலில் அதியன் பொருள் அதிகமாக இருந்தால் பிறர்க்குக் கொடுத்து பொருள் குறைவாக இருந்தால் பிறரோடு கூடி உண்ணும் வறுமை உடையவர் என்று ஔவையார் அதியமானின் இயல்பைப் புகழ்கின்றார். வாள் மங்கலம் துறையமைந்த இப்புறப்பாடலில் அதியமானின் வாள் கருவிகள் குத்தியதில் நுனி முறிந்து உள்ளன என்றும் புகழ்கின்றார். தூது சென்ற மன்னனின் படைக்கருவிகள் கொட்டிலில் மயில் தோகை அணிந்து மாலை சூட்டி, வலிமையான திரண்ட பிடியையுடையதாய் நெய் பூசப்பெற்று காவலில் உள்ளது என்று வஞ்சப் புகழ்ச்சி மூலம் அதியமானின் படைக்கலச் சிறப்பைப் புகழ்ந்து பாடுகிறார்.

**முடிவுரை**

ஔவையின்பாடாண்திணை,தும்பைத் திணை, வாகைத் திணை, ஆகிய திணைகளிலும் இயன்மொழித் துறை, வல்லாண் முல்லைத் துறை, விறலியாற்றுப்படைத் துறை, பரிசில்

கடாநிலைத் துறை, வாள் மங்களலம் துறை, அரச வாகைத் துறை, வாழ்த்தியல் துறை, தானை மறம் துறை போன்ற துறைகளிலும் புறப்பாடல்களாய் பாடியுள்ளார்.

இப்புறப்பாடல் மூலம் அதியனின் வீரம், புகழ், கொடை, வலிமை, அருள், போன்ற பண்புகளை உணரமுடிகிறது. ஒவ்வொரு பாடலிலும் அவ்வத் திணைக்குரிய தகுந்த செய்திகளும் துறைச் செய்திகள் பொருத்தமுறக் காட்டப்பட்டுள்ளன. அதியனின் வீரம் என்ற பாடுபொருட் தன்மையினை விளக்க ஔவையார் எடுத்துக்கொண்ட உவமைசார் பொருட்நிலை சிறந்த புலமையின் வெளிப்பாடு என்பது புலனாகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. ச.வே.சுப்பிரமணியன், புறநானூறு, ப.150
2. மேலது, ப.152
3. மேலது, ப.152
4. மேலது, ப.154
5. மேலது, ப.154
6. மேலது, ப.156
7. மேலது, ப.156
8. மேலது, ப.156